பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 12 புதன்கிழமை 28.07.2021 கதிர் 131

## யாழில் சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்!

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிஸ் விடுதியில் இருந்து பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த சார்ஜென்ட் ஜயசேகர (வயது 45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

☞ 2

# அரசுக்கு எதிராக யாழில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்





**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ்ப்பாணத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் சேவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆசிரியர், மாணவர், பெற்றோர்களைத் துன்புறுத்துகின்ற கல்வி நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு, 24 வருட ஆசிரியர், அதிபர்களின் சம்பள

☞ 2

# ராஜபக்ஷ அரசின் அட்டூழியங்களுக்கு எதிராகவே நாடெங்கும் போராட்டங்கள்

## விரைவில் ஆட்சி கவிழும் என்று சஜித் ஆரூடம்

ராஜபக்ஷ குடும்ப அரசின் அடக்குமுறைகள் – அட்டூழியங்களுக்கு எதிராகவே நாடு முழுவதிலும் ஜனநாயகப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இந்த அரசின் ஆட்சி கவிழும் நாள் வெகுதொலைவில் இல்லை.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

☞ 2



## நல்லூர் பகுதிக்கு 12,000 தடுப்பூசிகள்

யாழ். நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அனைத்துக் கிராம சேவகர் பிரிவுகளுக்குமான மூன்றாம் கட்ட முதலாவது டோஸ் கொரோனாத் தடுப்பூசிகள் நாளை வியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன என்று நல்லூர்

☞ 2

## விபத்துக்களில் 10 பேர் மரணம்

நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளானவர்களில் 6 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் ஆவர்.

அத்துடன், வீதி

☞ 2

# கொத்தலாவல சட்டமூலத்தை முறியடிக்க ஒன்றிணைவோம்

## யாழ். பல்கலைக்கழகத்தில் போராட்டம்






இலவசக் கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக நீக்கக் கோரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

☞ 2

# மாடு கடத்தல் முறியடிப்பு



கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாடு கடத்தப்பட்டமை இன்று முறியடிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பளை நகரப் பகுதியில், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி, சூட்சுமமான முறையில், கூலர் வாகனத்தில், அனுமதிப் பத்திரமின்றி இறைச்சிக்காக கால்நடைகளை ஏற்றி வந்தவர், பளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

☞ 2

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக அரச பஸ் சேவையாளர்கள் கவனயீர்ப்பு



அரச பஸ் சேவையாளர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக இன்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

தனியார் பஸ் சேவையினருடனான முரண்பாடு காரணமாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக

☞ 2

## தாதியர்கள் ஒரு மணிநேரம் கவனயீர்ப்புப் போராட்டத்தில்

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் தாதிய உத்தியோகத்தர்களால் ஒரு மணிநேர கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

அரச தாதியர் சங்கத்தால் நாடு பூராகவும் ஒரு மணிநேர தொழிற்சங்கப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியா தாதிய உத்தியோகத்தர் சங்கத்தால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை



☞ 2

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்களை நிறுத்தி அவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

முழங்காவில் பகுதிக்கான சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ் சேவையினருக்கு இடையில் 3 நாள்களாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், இன்று முழங்காவில் பகுதிக்கான அரச பஸ் சேவையை இடைநிறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படாதவிடத்து, எதிர்வரும் 4ஆம் திகதிக்குபின்னர் கிளிநொச்சி சாலையிலிருந்து வேவைகளை இடைநிறுத்தி தொடர் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என ஊழியர்கள் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில், அக்கராயன், ஜெயபுரம் ஊடாக முழங்காவில் பகுதிக்கான சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (316)

## தாதியர்கள் ஒரு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தாதிய உத்தியோகத்தரின் உயிராபத்தை தடுக்க என். 95 மாஸ்க் வழங்கு, கொரோனா விடுதிகளுக்கு வழங்க ஒப்புக்கொண்ட வசதிகளை வழங்கு, வர்த்தமானி அறிவித்தலை உடனே வெளியிடு, தாதிய சேவை பதவி நிலை சேவை என சுற்றுநிருபம் வெளியிடு ஆகிய வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

தாதியர் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி உடன் கவனம் செலுத்தி உடனடியாக தீர்த்து வைக்க வேண்டும் எனக் கோரிய அவர்கள், தமது நியாயமான கோரிக்கைகள் தீர்க்கப்படாத விடத்து மேலும் போராட்டம் தொடரும் எனவும் எச்சரித்தனர். (100)

## யாழில் சடலமாக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர் நேற்றிரவு உறக்கத்துக்குச் சென்ற நிலையில், இன்று காலை கடமைக்கு அழைத்துச்செல்ல சக உத்தியோகஸ்தர் ஒருவர் அவரை எழுப்ப முயன்ற போது அவர் உயிரிழந்தது தெரியவந்தது.

அதனையடுத்து பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கொத்தலாவல ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் கொத்தலாவல சட்ட மூலம் நிறைவேற்றப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது அமைப்புக்கள், ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றால் நாடு பூராகவும் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழகத்திலும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று நடத்தப்பட்டது.

## மாடு கடத்தல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் இருந்து ஒருவர் 9 மாடுகளைக் கூலர் வாகனத்தில் ஏற்றி வருகின்றார் என்று பளைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து பளை நகரப் பகுதியில் வைத்து, குறித்த வாகனத்தைப் பொலிஸார் பரிசோதித்த வேளை 9 மாடுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (316)

## ராஜபக்ஷ அரசின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர், தாதியர்கள், சுகாதாரப் பிரிவினர், பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் இன்று அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து விட்டனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து அராஜக ஆட்சி நடத்தும் இந்த அரசை நாட்டிலுள்ள அனைவரும் வெறுத்து விட்டார்கள். அதனால் அவர்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராடுகின்றார்கள்.

ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைகள் - அட்டூழியங்களுக்கு எதிராக அவர்கள் கோஷம் எழுப்புகின்றார்கள்.

இவ்வாறான ஜனநாயகப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். இதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றோம்.

இந்த அரசின் ஆட்சி கவிழும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பது இந்த ஜனநாயகப் போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன.

போலியான வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, நாட்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்கலாம் என்று நினைத்தது. ஆனால், நாடு முழுவதிலும் இன்று அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன - என்றார்.

## அரசுக்கு எதிராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடுக்கு உடனடியாத் தீர்வு வழங்கு, இலவசக் கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக ரத்துச் செய் ஆகிய மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும், நாடு பூராகவும் ஆசிரியர் சங்கங்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

## விபத்துக்களில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்களில் சிக்கி 3 பாதசாரிகள் மரணித்துள்ளனர்.

அதேவேளை, ஓட்டோ சாரதி ஒருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வாகன விபத்துக்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்றும், நாளொன்றில் சராசரி 8 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழக்கின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூர் பகுதிக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இம்முறை யாழ். மாவட்டத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இரண்டு லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளில் 12 ஆயிரம் தடுப்பூசிகள் நல்லூர் பகுதிக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனடிப்படையில் ஆறு நிலையங்களில் வைத்து இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கோண்டாவிலில் அமைந்துள்ள நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள திருமண மண்டபம், திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலை ஆகிய தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் நாளை (29) முதல் தொடர்ச்சியாகத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, செங்குந்தா இந்துக் கல்லூரியில் நாளையும், அரியாலை நாவலடிப் பகுதியில் நாளைமறுதினமும், மணியந்தோட்டம் உதயபுரம் பகுதியில் எதிர்வரும் சனிக்கிழமையும் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

முதல் இரண்டு தடவைகளில் தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் இந்த முறை தவறாது தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேலைவாய்ப்பு**
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை நேரடி நடவடிக்கை

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் மனித உரிமைகள் ஆர்வலர் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவையும் ஏனையோரையும் விடுவிக்குமாறு கோரி மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட 11 சர்வதேச அமைப்புகள் இலங்கை அரசிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை, ஆர்ட்டிக்கிள் –19 இயக்கம், மனித உரிமைகள் விருத்திக்கான ஆசிய மன்றம், பிரஜைகள் பங்களிப்புக்கான சர்வதேச கூட்டமைப்பு, முன்னிலைக் காவலர் அமைப்பு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமைகள் முயற்சிகளுக்கான சர்வதேச சட்டத்தரணிகள் அமைப்பு, சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு, அனைத்து வகையான இன ஒதுக்கல் மற்றும் பாகுபாட்டுக்கு எதிரான சர்வதேச இயக்கம், இலங்கை தொடர்பான சர்வதேச இயங்கு குழு, உண்மை மற்றும் நீதிக்கான இலங்கை பிரச்சார அமைப்பு ஆகியனவே இன்று வெளியிட்ட கூட்டு அறிக்கை மூலம் இதனைக் கூறியுள்ளன.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு நேர்ந்துள்ள விபரீதங்கள், துன்புறுத்தல்கள், அவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து எல்லாம் இந்த அறிக்கையில் விலாவாரியாக விவரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உரிய சட்ட உதவிகள் மற்றும் நீதியான விசாரணை பொறிமுறை ஆகியன கிட்டுவதை உறுதி செய்யுமாறு இந்த அறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டு இருக்கின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுவதுமாக விலக்கி, வேறு பொருத்தமான – முறையான – மாற்று சட்டங்களை ஏற்படுத்துவோம் என சர்வதேச சமூகத்துக்குத் திரும்பத்திரும்ப உறுதியளித்த இலங்கை இப்போது அந்த நடவடிக்கையில் இருந்து முற்றிலுமாக பின்வாங்கி விட்டது என்பது இன்று நிதர்சனமான உண்மை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு இப்போது சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படும் பரிந்துரை அரசின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கப் போதுமானதாகும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றிலும் தவறானது. மனித நாகரிகத்துக்கு மாறான – கொரூரமான – மிருகத்தனமான –கீழ்த்தரமான – பண்பியல்புகளைக் கொண்ட சட்டம் இது என்பவற்றையெல்லாம் முன்னைய இலங்கை அரசுகள் சர்வதேச மட்டத்திலேயே ஒப்புக்கொண்டிருக்கின்றன.

அதன் காரணமாக அந்தச் சட்டத்தை இயன்ற விரைவில் விலக்கி, மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வரவும் சர்வதேச தளத்தில் இலங்கை அரசு உறுதிமொழி அளித்திருந்தது.

அந்த உறுதி மொழியின் அடிப்படையில் சர்வதேச உதவிகள், அனுசரணைகள், ஒத்துழைப்புகளை தொடர்ந்து பெற்று வந்த கொழும்பு இப்போது தனது சுயரூபத்தை திரும்பவும் காட்டத் தொடங்கிவிட்டது.

தன்னுடைய எதேச்சாதிகார சர்வாதிகார ஆட்சிமுறை நிர்வாகத்தையும் கெடுபிடி இராணுவப் போக்கு அதிகாரத்தையும் கொண்டு செல்வதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் தனக்கு வாய்ப்பானது எனக் கருதும் கொழும்பு அதிகார பீடம் அதனால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றியமைக்கப்படும் என்ற முன்னைய அரசின் யோசனைத் திட்டத்தை கைவிட்டு விட்டது. அந்தச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் தனது அடக்குமுறையைத் தொடர்வதற்கு அது கங்கணம் கட்டி நிற்கின்றது.

நாட்டின் சட்டங்களை சர்வதேச நீதி முறை நியமங்களுக்கு அமைவாகப் பேண வேண்டும் என்ற உலகளாவிய அபிப்பிராயத்திற்கு தற்போதைய கோட்டாபய அரசு மதிப்பளிக்கப் போவதில்லை என்பது தெளிவான ஒன்று.

இது விடயத்தில் சர்வதேசத்தின் எத்தகைய மென்முறை அழுத்தத்திற்கும் கோட்டா அரசு இலகுவில் இணங்கப் போவதில்லை என்பதும் உறுதியானதுதான்.

'மயிலே மயிலே இறகு போடு!'என்றால் மயில் இறகு போடப் போவதில்லை. பிடுங்கி எடுத்தால்தான் உண்டு. அதே போன்ற நிலைமைதான் நீதி, நியாயமான மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டங்களை நடைமுறைப் படுத்துமாறு எதேச்சாதிகாரப் போக்குடைய கோட்டா அரசுக்கு உபதேசம் செய்வதும்.

இத்தகைய சர்வதேச நியமங்களை நாடுகள், அரசுகள் கடைப்பிடிப்பது மனித குலத்தின் மாண்புகளின் பெயரால் கட்டாயமானது என்பதை உரியமுறையில் – உறைக்குமால் போல – உணர்த்தினால்தான் கோட்டாபய அரசுக்கு அது புரியும்.

அதற்கான வழிமுறைகள், நெறிகள், தந்திரோபாயங்கள் சர்வதேசத்திடம் உண்டு.

இதுவிடயத்தில் இனிமேலும் கொழும்பு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் பகிரங்க அறிக்கைகள், அறிவிப்புகளை முன்வைப்பதை விடுத்து, தேவையற்று காலத்தை இழுத்தடிக்காமல், நேரடியாக நிலைமைகளை மாற்றியமைக்கக் காத்திரமான பதிலடி நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை மேற்படி அமைப்புகள் கோருவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

# தீவிரவாதத் தாக்குதல் அபாயம் இலங்கையில் குறைந்துள்ளது

## பிரித்தானியா அறிவிப்பு

பிரித்தானியா, தமது அண்மைய பயண ஆலோசனையில், இலங்கையில் தீவிரவாதத் தாக்குதல்களின் அபாயத்தை குறைத்துக் காட்டியுள்ளது.

இலங்கையில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கும் ஆபத்து மிகக் குறைவு, குறைந்து வருகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கக்கூடும் என்று கடந்த 20 ஆம் திகதியின் பயண ஆலோசனை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விருந்தகங்கள், சுற்றுலா தளங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற வெளிநாட்டினர் பார்வையிடும் இடங்கள் உட்பட இடங்களில் தாக்குதல்கள் இருக்கக்கூடும் என்று அது கூறுகிறது.

பயணிகள் நெரிசலான பொது இடங்கள், பெரிய கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைத் தவிர்க்கவும், உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. 'ஈராக் மற்றும் சிரியாவில் மோதலால் குழுக்கள் அல்லது ஆள்கள், இங்கிலாந்து நலன்கள் மற்றும் பிரித்தானிய பிரஜைகளுக்கு எதிராக உலகளவில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தும் அச்சுறுத்தல் உள்ளது. எனவே இந்த நேரத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இங்கிலாந்தின் வெளியுறவு அலுவலகம் கோரியுள்ளது.

# வெலிக்கடை படுகொலையின் 38 ஆவது நினைவு மன்னாரில்



வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளுக்கு இதன் போது அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள், அக்கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்தன், ஈ.பி.ஆர்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுக் கடன் தவணைக்காக 100 கோடி டொலர் செலுத்தப்பட்டது

## அரசு அறிவிப்பு

வெளிநாட்டில் இருந்து பெறப்பட்ட கடன்களுக்கான 100 கோடி டொலர் தவணைக் கட்டணத்தை அரசாங்கம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உலக நாடுகள் பல கொரோனாத் தொற்றால் பொருளாதாரச் சரிவைச் சந்தித்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் சிறந்த முறையில் பணப்பரிவர்த்தனை நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறினார்.

அதன்படி எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் கடந்த திங்கட்கிழமை செலுத்த வேண்டிய தவணைப் பணத்தை செலுத்தியுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். வெளிநாட்டு கடன்கள் தொடர்பாக விமர்சனங்களை முன்வைத்தவர்களால் அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பாக எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அமெரிக்காவைப் போன்ற பிரத்தியேக அறை ஜனாதிபதியின் ஊடக சந்திப்புக்கு அமைப்பு




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடக சந்திப்பை நடத்துவதற்கு என அமெரிக்காவை போன்ற பிரத்தியேக அறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர் கலந்துகொண்டு ஜனாதிபதியை அல்லது அவரது ஊடகப் பேச்சாளரிடம் கேள்விகளைக் கேட்கும் வகையில் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதற்கும் தவறான தகவல்கள் பரவாமல் தடுக்கவும் இந்த அறை பயன்படுத்தப்படும் என ஜனாதிபதியின் ஊடக பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாராந்திர ஊடக சந்திப்புகள் அங்கு நடைபெறும் என்றும் அதற்காக அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் கிங்ஸ்லி ரத்நாயக்க குறிப்பிட்டார்.



# புழுதி புயலால் 22 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

## அமெரிக்காவில் 8 பேர் பலி

அமெரிக்காவின் உட்டா மாகாணம் கனோஸ் நகருக்கு அருகே மிகப்பெரிய நெடுஞ்சாலை உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த நெடுஞ்சாலையில் ஏராளமான வாகனங்கள் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தன. விடுமுறைநாள்என்பதால்வழக்கத்தை விடவும் போக்குவரத்து மிகவும் நெரிசலாக இருந்தது.

இந்நிலையில் அங்கு திடீரென பலத்த காற்று வீசியது. அதனைத் தொடர்ந்து அங்கு புழுதிபுயல்உருவானது. இதனால் நெடுஞ்சாலையில் வாகன சாரதிகளுக்கு, முன்னால் செல்லும் வாகனங்கள்தெரியாமல்போனது. இதனால் நெடுஞ்சாலையில் வேகமாக வந்த லொறி ஒன்று முன்னால் சென்ற ஒரு காரின் மீது மோதி நின்றது. இதையடுத்து லொறிக்கு பின்னால் வந்து கொண்டிருந்த வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதின.

இப்படி மொத்தம் 22 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி சங்கிலி தொடர் விபத்து நேரிட்டது. இந்த கோர விபத்தில் 4 சிறுவர்கள் உள்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பலியாகினர். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஏற்கனவே, கடந்த மாதம் 20 ஆம்திகதிஅலபாமாமாகாணத்தில் புயல் தாக்கியபோது 15 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஏற்பட்ட சங்கிலி தொடர் விபத்தில் 10 பேர் உயிரிழந்தமை நினைவு கூரத் தக்கது.

# இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்றால் 3 ஆண்டு பயணத் தடை!

## சவுதி அரேபிய அரசு எச்சரிக்கை

அரசின் அனுமதி இன்றி சிவப்பு பட்டியலில் இருக்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்றால், 3 ஆண்டு பயணத் தடை விதிக்கப்படும் என தனது மக்களை சவுதி அரேபிய அரசு எச்சரித்துள்ளது.

கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக, இந்தியா, யுஏஇ, உள்ளிட்ட நாடுகளுக்கு பயணம் செய்வதை தடுக்கும் நோக்கில் அவற்றை சிவப்பு பட்டியல் நாடுகளாக சவுதி அரேபியா அறிவித்தது.

ஆனால் கடந்த மே மாதம் முறையான அனுமதி அன்றி சவுதி குடிமக்கள் சிலர் இந்த நாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் அவர்கள் திரும்பி வரும் போது பெரும் அபராதத்துடன்,3 ஆண்டு பயணத் தடையும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



### உலகளாவிய ரீதியில் கொரோனா

# 19 கோடி 59 லட்சத்தைக் கடந்தது




சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்றுப் பரவி ஏறத்தாழ ஒரு ஆண்டு கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை.

இந்நிலையில்,உலகம்முழுவதும்கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 19 கோடி 49 லட்சத்தைக் கடந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 17 கோடி 76 லட்சத்திற்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 41 லட்சத்து 92 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1கோடி 41லட்சத்திற்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 85 ஆயிரத்துக்கு மேமேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஷில், ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

**புகழ் பெற்ற மகாராஜா நிறுவனத்தின் தலைவரும் எமது கம்பன் கழகத்தின் ஆதரவாளருமான ஆர். இராஜமகேந்திரன் அவர்களின் மறைவையொட்டி கம்பவாரிதி அவர்கள் எழுதிய அஞ்சலிக்கவிதை**

# நீளத்தான் புகழ் வளர்த்து நிமிர்ந்து நின்றான்

உலகமது போற்றுகிற தமிழ்த்தாய் தன்னின்
ஒப்பற்ற பெரும் புதல்வன் ஓய்ந்து போனான்.
திலகமென ஈழத்துத் தமிழர்க்கெல்லாம்
திகழ்ந்த பெரும் அறிவாளன் வீழ்ந்து போனான்
நலமிகுந்த இலங்கைத் தாய் உலகோர் முன்னே
நற்புகழைத் தேடிடவே வழிகள் செய்த
வளம் மிகுந்த பேராளன் பலரும் வாட
வையமதைத் துறந்தே வான் காணப் போனான்.

ஈழத்துத் தமிழர்களின் ‘சக்தி’ யாக
ஏற்றமுடன் தலைநகராம் கொழும்பில் வாழ்ந்து
நீளத்தான் புகழ் வளர்த்து நிமிர்ந்து நின்றான்
நெடிதாக இனப்பெருமை வளர்த்து நின்றான்.
காலத்திற்கேற்ற பல கடமை செய்து
கண்ணியமாய் பல இனமும் பணிந்து போற்ற
சாலத்தான் தனிமரத்து விருட்சமாக
சார்பின்றி அனைவர்க்கும் நிழலே செய்தான்.

தமிழர்க்கு இந்நாடு தரத்தைத் தந்து
தாழ்வில்லா வாழ்வு தர மறுக்கும் நாளில்
அமிழ்தொத்த தன் அறிவால் ஆற்றல் காட்டி
அனைவரையும் தன் அடியில் பணியச் செய்தான்.
திமிரில்லா நற்பண்பால் தேசம் ஈர்த்து
தேற்றமுடன் அனைவரையும் போற்றி நின்ற
நிமிர்வுற்ற பெருமனிதன் நிழலாய்ப் போனான்.
நெஞ்சமெலாம் நெருப்பாக, நெகிழ்ந்து நின்றோம்.

இராஜ மகேந்திரனார் தன் நிமிர்வதாலே
ஏற்றமுடன் தலைவர்களும் பணிய நின்றார்.
பரா முகமாய் இருந்தோரும் இவரைத் தேடி
பணிந்த கதை பலவுண்டு பண்பால் இந்த
தரா தலத்தில் கட்சிகளை ஆட்டி வைத்து
தன் கருத்தை மக்கட்காய் உரைத்து நின்றோன்
நிராதரவாய்த் தமை விட்டுப் பிரிந்து போக
நெஞ்சமெலாம் வாடித்தான் மக்கள் சோர்ந்தார்.

செல்வத்தால் மலையளவு உயர்ந்து நின்றும்
சிறிதேனும் தற்பெருமை கொள்ளா ஐயன்
வெல்லத்தான் நினைந்தவர்கள் வீழ்ந்து போக
விருப்புடனே அவர் தமையும் ஈர்த்த ஐயன்
கள்ளத்தால் சதிகள் பல காட்டி நின்றோர்
களவெல்லாம் பயமின்றி வென்ற மன்னன்
உள்ளத்தால் இலங்கைத் தாய் மக்கள்தம்மை
உறவாக்கி நின்றவனும் உறங்கிப் போனான்.

விளையாட்டை விருப்போடு வளர்த்துவிட்டான்
வீறுடனே வர்த்தகத்தை ஆண்டு நின்றான்
கலையாதி விடயங்கள் தன்னில் தோய்ந்து
கற்றவர்கள் மகிழ்ந்திடவே பலவும் செய்தான்.
சளையாது அரசியலார் எதிர்ப்பை மீறி
தான் நினைத்த அத்தனையும் மக்கட்காக
நிலையாகச் செய்த மகன் விண்ணைச் சேர
நேசமுள நெஞ்சமெலாம் வாடிற்றம்மா!

குறி வைத்தால் அவர்தம்மின் நோக்கம் தன்னை
குறுக்கிட்டுத் தடுத்திடுதல் எவர்க்கும் ஆகா
நெறியற்ற எதையும் தன் மனத்தால் தானும்
நினைக்காத, செய்யாத நேர்மை தன்னால்
அறிவுற்ற பலர் மகிழ அனைத்தும் வென்றார்.
அன்பதனால் வீழ்ந்தோரை எழவே செய்தார்.
தறிகெட்ட யமனவனும் தடுக்கலாகா
தன் பாசம் வீசித்தன் சதியில் வென்றான்.

மலையகத்து இனம் உயர வழிகள் செய்தான்
மாண்புடனே வடகிழக்கைத் தாங்கி நின்றான்
அலைஅலையாய் பகை வளர்ந்த காலம் தன்னில்
அன்புடனே முஸ்லிம்கள் தன்னைக் காத்தான்
நிலையுடனே இந்துக்கள், பௌத்த மக்கள்
நெறி நின்று இயேசுபிரான் தன்னைப் போற்றும்
விலையதிலா அன்பரொடு இஸ்லாம் மக்கள்
வேற்றுமைகள் பாராது அணைத்து நின்றான்.

அன்றொரு நாள் கம்பனுடை பணிகட்காக
ஐயன் அவன் தனைத் தேடி நானும் சென்றேன்
என்னை அவன் தான் எழுந்து வந்தே ஏற்று
இனிமையுடன் பல பேசி மகிழச் செய்தான்
எண்ணரிய பெருந்தொகையை அள்ளித் தந்து
எங்களுடை ஆலயத்தை எழும்பச் செய்தான்
தன் நிலையின் உயர்வுதனை மறந்து என்னை
தரைவரையும் வந்தேதான் அனுப்பிவைத்தான்.

இலங்கை அதன் வேர் அசையும் இந்த வேளை
இப் பெரிய மாமனிதன் இருந்தால் தாங்கி
நிலையுறவே செய்திடுவான் தேசம் என்று
நினைத்தேதான் விதி மகனும் சதி செய்தானோ?
அலைஅலையாய் சோதனைகள் அடுத்து வந்து
அசைக்கிறது தேசத்தை யாரே காப்பார்
விலையதிலாப் பெருமகனும் விண்ணில் நின்று
விதிமாற்றி அருள்வானோ? வேண்டி நிற்போம்.

**-கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்-**

# ‘தகைசால் தமிழர்’ என்ற பெயரில் புதிய விருது தமிழக முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



தமிழகத்துக்கும், தமிழினத்துக்கும் பெரும் பங்காற்றியவர்களுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்க தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு, அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும் எழுதிய கடிதத்தில், அரசு அலுவலகங்களில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ் பயன்படுத்தப்படவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து, தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களை கௌரவிக்கும் வகையில், விருது மற்றும் பரிசுத் தொகையை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, தகைசால் தமிழர் என்ற பெயரில் புதிய விருது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுக்குரியவர்களை அடையாளம் காண்பதற்காக குழு ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இந்தக் குழுவால் தேர்வு செய்யப்படுபவருக்கு சுதந்திர தினத்தன்று தகைசால் தமிழர் விருது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்படும். மேலும், ரூபா.10 லட்சத்திற்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் இந்த விருதோடு வழங்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழ்நாட்டிற்கும்,தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக, ‘தகைசால்தமிழர்” என்ற பெயரில் புதிய விருதை உருவாக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். மேற்படி விருதிற்கான விருதாளரைத் தேர்வு செய்யும் பொருட்டு, தொழில் துறை, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளரை உள்ளடக்கிய ஒரு குழுவை அமைக்கவும் அவர் ஆணையிட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும்தேர்வுசெய்யப்படும்“தகைசால் தமிழர்” விருது பெறும் விருதாளருக்கு ரூபா.10 லட்சத்திற்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் சுதந்திரதின விழாவின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தமிழகத்தில் 5 நாள் சுற்றுப்பயணம்



மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் நினைவு தினமான ஒகஸ்ட் 7 ஆம் திகதி, தமிழக சட்டசபையில் அவரது உருவப் படத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் படத்திறப்பு விழாவுக்கு சோனியா காந்தி உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைக்க தமிழக அரசு சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்திக்க கடந்த 19 ஆம் திகதி டெல்லி சென்றபோது இந்தப் படத்திறப்பு விழாவில் பங்கேற்க வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

முதலமைச்சரின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தமிழ்நாட்டிற்கு ஒகஸ்ட் முதல் வாரத்தில் வருகை தர உள்ளார் என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒகஸ்ட் 2 ஆம் திகதி தமிழகத்துக்கு வரவுள்ள ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், தமிழகத்தில் 5 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டசபை நூற்றாண்டு விழாவில் அவர் கலந்துகொள்கிறார். பின்னர் நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் இராணுவக் கல்லூரி அதிகாரிகள் பயிற்சி மையத்தில் வருகிற 4 ஆம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியிலும் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கலந்து கொள்ள விருக்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய ஜனாதிபதியின் தமிழக வருகையையொட்டி அதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பால் 640 பேர் சாவு!



இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 43,654 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்றுப் பாதிப்பால் ஒரே நாளில் 640 பேர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் தொற்றுப் பாதிப்புடன் சிகிச்சையில் உள்ளவர்கள் எண்ணிக்கை 3,99,436 ஆக உள்ளது எனவும் கொரோனாவில் இருந்து ஒரே நாளில் 41,678 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொரோனா பாதிப்பிலிருந்து இதுவரை குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 3 கோடியே 6 லட்சத்து 63 ஆயிரத்து 147 ஆகவும், தொற்றுப் பாதிப்பால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 4 லட்சத்து 22 ஆயிரத்து 22 ஆகவும் உள்ளது. தினசரி தொற்று பாதிப்பு எண்ணிக்கை 2.51 சதவீதமாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறையில் உள்ள சிவசங்கர் பாபாவுக்கு சிறப்பு அறை ஒதுக்க நீதிபதி மறுப்பு

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தில் உள்ள சுஷில் ஹரி சர்வதேசப் பாடசாலையில் மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்தார் என புகார் எழுந்ததையடுத்து பாடசாலையின் தாளாளர் சிவசங்கர் பாபா போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர் மீது 3 போக்சோ வழக்குகள் உள்ள நிலையில், ஜாமீன் கேட்டு கடந்த வாரம் செங்கல்பட்டு நீதிமன்றில் சிவசங்கர் பாபா தரப்பில் அவரது சட்டத்தரணி மனுதாக்கல் செய்திருந்தார். அப்போது அவருக்கு பிணை தர செங்கல்பட்டு நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இதனையடுத்து சிறையில் உள்ள சிவசங்கர்பாபாவுக்கு, சிறையில் சிறப்பு வகுப்பு அறை வழங்கக்கோரி செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றில் சிவசங்கர் பாபா தரப்பில் கடந்த 22 ஆம் திகதி மனு அளித்திருந்தனர். இந்த மனுவின் மீதான விசாரணை நேற்று நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி தமிழரசி, சிறையில் சிறப்பு வகுப்பு அறையை வழங்க அனுமதி மறுத்து அந்த மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருக்கிறார்





# கர்நாடகாவின் புதிய முதலமைச்சராக பசவராஜ் பொம்மை பதவியேற்றார்

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த எடியூரப்பா நேற்று முன்தினம் தனது பதவியை ராஜினாமா செய்தார். பா.ஜனதாக் கட்சியின் மேலிடம் உத்தரவிட்டதை அடுத்து அவர் பதவி விலகினார். இதையடுத்து கர்நாடகாவின் அடுத்த முதலமைச்சர் யார்? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

பா.ஜனதா எம்.எல்.ஏக்கள் கூட்டம் பெங்களூரில் நேற்று இரவு நடை பெற்றது. இதில் எடியூரப்பா, மேலிட பொறுப்பாளர் அருண்சிங், கட்சியின் மாநிலத் தலைவர் நளின்குமார் கட்டீல், மேலிட பார்வையாளர்கள் தர்மேந்திர பிரதான், கின்ரெட்டி, தேசிய பொதுச் செயலாளர் சி.டி.ரவி மற்றும் பல பா.ஜனதா எம்.எல்.ஏக்கள் கலந்து கொண்டனர். இதில் கட்சியின் சட்டசபைக் குழுத் தலைவராக அதாவது, புதிய முதலமைச்சராக பசவராஜ் பொம்மை ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை எடியூரப்பா அறிவித்தார்.

அதன் பின்னர் பசவராஜ் பொம்மை, ராஜ்பவனுக்குச் சென்று ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதம் வழங்கினார். அதை ஏற்றுக்கொண்ட ஆளுநர் தாவர்சந்த் கெலாட், ஆட்சி அமைக்க வரும்படி அழைப்பு விடுத்ததையடுத்து, இன்று பெங்களூரில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் கர்நாடக புதிய முதலமைச்சராக பசவராஜ் பொம்மை பதவி ஏற்றுள்ளார். அதைத்தொடர்ந்து புதிய மந்திரிகள் பதவி ஏற்பு விழா அடுத்த வாரத்திற்குள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மட்டக்களப்பில் நேற்று மட்டும் 68 பேருக்கு தொற்று உறுதி

மட்டக்களப்பில் கடந்த 24 மணி நேரத்தில் 68 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் மேலும் கூறியுள்ளதாவது, கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 22 பேரும், செங்கலடி வைத்திய அதிகாரிகள் பிரிவில் 11பேரும், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 10பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பில் இதுவரை 8,275 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 116பேர் உயிரிழந்துள்ளனர் , 755 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்று மாத்திரம் 32,221 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இதுவரை 142,754 கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நினைவேந்தியவர்களுக்கு ஓகஸ்ட் 9 வரை மறியல்

மட்டக்களப்பு – கிரான் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடாத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில், கல்குடா பொலிஸாரினால் கடந்த மே மாதம் 18 திகதி இரு பெண்கள் உட்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டமைக்கான வழக்கு நேற்று வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது

வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.பசீல் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் மனித உரிமை செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான ரெட்ணவேல் மற்றும் கே.சுகாஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்ட 10 பேர் சார்பாகவும் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 09.08.2021 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் எவ்விதமான அறிக்கை மற்றும்அடையாளங்களும் பொலிஸார் மன்றில் சமர்ப்பிக்கவில்லை. அத்தோடு பத்து சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொற வழங்கும் நிகழ்வு

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார். சாய்ந்தமருதில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களில் உயர்தரம் கற்கும் 101 மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தலா ஆயிரத்தி 500 ரூபா வீதம் 10 மாதத்திற்கான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இப்புலமைப் பரிசிலூடக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்லடிப் பாலத்தில் இரு கார்கள் விபத்து

மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் நேற்று மாலை இரு கார்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதி விபத்துக்குள்ளாகின. மட்டக்களப்பு நகர் பகுதியிலிருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இரு கார்களையும் முந்தி செல்ல முற்பட்டபோது, முன்னால் சென்ற கார் சடுதியாக நிறுத்த முற்பட்ட நிலையில் பின்னால் சென்ற கார் முன்னால் சென்ற காரை மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள் ளது.மேற்படி விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மட்டு . திருப்பெருந்துறை ஆஞ்சநேயர் ஆலயத்தின் நவோத்திர சங்காபிஷேகம்



மட்டக்களப்பு திருப்பெருந்துறை அருள்மிகு ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தின் நவோத்திர சங்காபிஷேகம் நேற்று நண்பகல் பக்திபூர்வமாக சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து நடைபெற்றது.

கடந்த 12ஆம் திகதி கர்மாரம்பத்துடன் ஆரம்பமான இவ் ஆலய மகா கும்பாபிஷேக உற்சவம் 16 ஆம் திகதி வரை இடம்பெற்றதை தொடர்ந்து தொடர்ச்சியாக 10 தினங்கள் மண்டலாபிஷேக பூஜைகள் நேற்று வரை நடைபெற்று முல்லைத்தீவு கற்பக விநாயகர்ஆலய பிரதமகுரு சிவஸ்ரீதிருஞான சம்பந்தர் குருக்கள் தலைமையில் நவோத்ரா சங்காபிஷேகம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் முதலாவது பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம் இதுவாகும்.

# மட்டக்களப்பில் பாசிக்குடா கடற்கரைக்கு செல்லத் தடை



கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமான பாசிக்குடா கடற்கரைக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத்தொற்றுகாரணமாகவே குறித்த கடற்கரைக்கு சுற்றுலாப்பயணிகள் செல்வதை தற்காலிகமாக தடைவிதித்துள்ளதாக பாசிக்குடா சுற்றுலா பொலிஸ் காவலரண் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த கடற்கரைப் பகுதிக்குள் எவரும் செல்லாத வகையில் தடைபோட்டு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சேதனப் பசளை உற்பத்தி முயற்சியாளர்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை



சேதனப் பசளை உற்பத்தி முயற்சியாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் விசேட செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக, நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், சேதனப் பசளைகளைக் கொண்டு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் விசேட செயலமர்வு மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இதன்போது சேதனப் பசளைகளை சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களுக்குத் தேவையான விவசாய மற்றும் கமநலம் சார்ந்த தெளிவூட்டல்களும், அரச வங்கிகளினால் வழங்கப்படும் கடன்வசதிகள் தொடர்பான விவரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட உரச் செயலக உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிராஜுதீன், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத் ஆகியோர் கலந்து கொண்டு உற்பத்தியாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினர்.

மேலும் இம் முயற்சியாளர்களுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது செங்கலடி, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை, வவுணதீவு, ஆரையம்பதி, காத்தான்குடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர்கள், சேதனப் பசளை உற்பத்தி முயற்சியாளர்கள், விவசாயிகள், மாவட்ட செயலக, பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# டோக்கியோ ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதலிடம்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரையான நிலவரத்தின்படி, பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது.

11 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 20 பதக்கங்களை ஜப்பான் வென்றுள்ளது. இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா, 10 தங்கம், 10 வெள்ளி 9 வெண்கலம் அடங்கலாக மொத்தாக 29 பதக்கங்களைப் பெற்றுள்ளது. 10 தங்கம், 5 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தமாக 23 பதக்கங்களுடன் சீனா 3 ஆம் இடத்திலும் 7 தங்கம், 8 வெள்ளி 4 வெண்கலம் அடங்கலாக 19 பதக்கங்களுடன் ரஷ்யா 4 ஆம் இடத்திலும் உள்ளன.

ஆஸ்திரேலியா, பிரித்தானியா, தென்கொரியா, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## டோக்கியோ ஒலிம்பிக் 100 மீற்றர் நீச்சலில்

# 17 வயது அமெரிக்க வீராங்கனை தங்கப்பதக்கத்தை வென்றார்





டோக்கியோ ஒலிம்பிக் மகளிர் 100 மீற்றர் பிரெஸ்ட் ஸ்ட்ரோக் நீச்சல் பிரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த 17 வயது வீராங்கனை லிடியா ஜகோபி தங்கம் வென்று சாதனை படைத்தார்.

நீச்சல் பிரிவில் அமெரிக்காவுக்கு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் முதல் தங்கத்தை வென்றுகொடுத்திருக்கிறார் லிடியா. அதே போட்டியில், தனது இரண்டாவது ஒலிம்பிக் தங்கப் பதக் கத்தை வெல்லும் முனைப்போடு போட்டியிட்ட சக அமெரிக்க வீராங்கனை லில்லி கிங்கிற்கு வெண்கலப்பதக்கமே கிடைத்தது. இது ஒலிம்பிக்கில் இவரது மூன்றாவது பதக்கமாகும்.


லிடியா கடைசி 50 மீற்றரில் பிரமாதமாக வேகம் கொடுத்து 1 நிமிடம் 4.95 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். வெள்ளிப்பதக்கத்தை தென்னாபிரிக்காவின் தத்யானா ஷுன்மாக்கர் தட்டிச் சென்றார். தங்கம் வெல்ல முனைப்புடன் இருந்த அமெரிக்க வீராங்கனை லில்லி கிங் வெண்கலம் வென்றார்,




# ரி–20 பந்துவீச்சாளர் தரவரிசையில் வனிந்து ஹசரங்க இரண்டாமிடத்தில்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ரி-20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இலங்கை அணி வீரர் வனிந்து ஹசரங்க இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். ரி-20 பந்துவீச்சாளர்களுக்கான புதிய தரப்படுத்தலை இன்று சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி 720 புள்ளிகளுடன் இலங்கை அணியின் வீரர் வனிந்து ஹசரங்க இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். முதலிடத்தில் தென்னாபிரிக்க அணியின் வீரர் ம்ஸி 792 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். இதுவரை இரண்டாவது இடத்திலிருந்த ஆப்கானிஸ்தான் அணியின் வீரர் ரஷீட் கான் 3 ஆவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளார்.



## க்ருனல் பாண்ட்யாவுடன் தொடர்பிலிருந்தோருக்கு

# கொரோனாத் தொற்று இல்லை

இலங்கை – இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடர்கள் இலங்கையில் நடைபெற்றுவருகின்றன. ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்திய அணி கைப்பற்றிய பின்னர் தற்போது ரி–20 தொடர் நடைபெறுகிறது. முதலாவது ரி–20 போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றிருந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்றைய தினம் நடைபெறவிருந்தது.

ஆயினும், இந்திய அணி வீரரான க்ருனல் பாண்ட்யாவுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நேற்றைய போட்டி பிற்போடப்பட்டது. அவரோடு தொடர்பிலிருந்த அணியின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகளின்படி அவர்களில் யாருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

க்ருனால் பாண்ட்யா தொடர்ந்து தனிமைப்படுத்தலில் இருப்பார் என்றும் அவரோடு தொடர்பிலிருந்தவர்களுக்கு இன்னுமொரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களைத் தொடர்ந்து தனிமைப்படுத்தலில் வைப்பது குறித்து தீர்மானிக்கப்படுமென்றும் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆயினும், இவர்களில் யாரும், இந்திய அணியோடு இணைக்கப்படாது வேறாகவே தங்கவைக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது. பாண்ட்யாவை எத்தனை நாள்கள் தனிமைப்படுத்துவது என்பது குறித்தும், இந்த விடயத்தினால் இங்கிலாந்திலுள்ள இந்திய டெஸ்ட் அணியோடு இணையவிருக்கும் ப்ரித்வி ஷா மற்றும் சூர்யகுமார் யாதவ் இருவரதும் பயணங்கள் என்னவாகும் என்பது குறித்தும் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முழு மலையகத் தமிழர்களும் வீட்டுப் பணியாளர்கள் அல்லர்!



## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

மலையகதமிழ்சமூகம் இன்று சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளவும், சமூகம் எழுச்சி பெறவும் மலையகத்தின் முக்கிய நான்கு சமூக கூறுகளான அரசியல் செயற்பாட்டாளர்கள், சட்டத்துறை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கூட்டிணைந்து செயற்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் தமக்குரிய பணியைக் கூட்டுபொறுப்படன் நிறைவேற்ற வேண்டும். இதுவே மலையகத்தின் இன்றைய தேவை என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மலையக சட்டத்துறை மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கூறியவை வருமாறு முழு இந்திய வம்சாவளி மலையக தமிழர்களும்வீட்டுபணியாளர்கள் அல்லர். முழு இந்திய வம்சாவளி மலையகத்தமிழர்களும்தோட்டத் தொழிலாளர்களும் அல்லர். இப்படியான ஒரு கருத்தை ஒரு சில இனவாதிகள் நிறுவ முயல்கிறார்கள்.

இப்படி தான் ஒரு காலத்தில் அமெரிக்காவில் வெள்ளை இன ஆதிக்கவாதிகள், கறுப்பு இனத்தவரை சித்திரிக்க முயன்றார்கள். இது சூட்சுமம் நிறைந்த கருத்து. இலங்கையிலும் இது திட்டமிட்டு பரப்பப்படுகிறது.

இது பற்றி நான் எப்போதும் சுட்டிகாட்டி வந்துள்ளேன். அதை இப்போதும் நான் எடுத்து சொல்கிறேன். முதலில் நாம் ஒன்றுகூடி இந்தக் கருத்தை முறியடிக்க வேண்டும். இதை எப்படி அமெரிக்காவில் கறுப்பு இனத்து செயற்பாட்டாளர்கள் முறியடித்தார்களோ, அப்படியே நாமும் முறியடிக்க வேண்டும்.

மலையக சமூகம் இன்று வளர்ந்து வருகிறது. இங்கே இன்று அமைச்சர்களும், எம்.பிக்களும், ஏனைய உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளும் இருக்கின்றார்கள். சட்ட வல்லுநர்களும், வளர்ந்த இளைய சட்டத்தரணிகளும் இருக்கின்றார்கள்.

தொண்டு நிறுவனப் போராளிகளும், பேராசிரியர்களும், கல்வியாளர்களும் அடங்கிய சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்கள். தலைநகரம் முதல் நாடு முழுக்க விரவி பரவியுள்ள வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், தனியார் துறை ஊழியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் அடங்கிய தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்கள் இருக்கிறார்கள்.

ஆகவே, மலையகத் தமிழர் இன்று ஒரு தேசிய சிறுபான்மை இனமாக, பல்வேறு அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் வளர்ந்து வருகின்றனர். மலையகத் தமிழ் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு பிரிவினர்கள்தான் இரண்டு லட்சம் தோட்டத்தொழிலாளர்கள் ஆவர்.

இவர்களைக் கைத்தூக்கி விட வேண்டிய கடப்பாடு, வேறு எவரையும் விட, மேற்சொன்ன மலையக சமூகத்தின் முன்னேறிய அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்களுக்கு இருக்கின்றது.

இன்றைய தேவை, மலையக அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்களின் கூட்டிணைந்த செயற்பாடாகும். ஒவ்வொ பிரிவினரும் தமக்குரிய பணியைக் கூட்டுப் பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும்.

சகோதர இனங்களைச் சார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நல்ல மனம் கொண்ட முற்போக்காளர்களைத் தவிர வேறு எவரும்எமக்குஉதவமாட்டார்கள். எம்மை எள்ளி நகையாட மட்டுமே பலருக்கு முடியும். எம்மை அவமானப்படுத்த மட்டுமே பலருக்கு முடியும்.

ஆகவே தான் எம்முடன் எவரும் விளையாட வேண்டாம் என நான் எப்போதும் எச்சரிக்கிறேன். எம்மை அவமானப்படுத்த நினைத்தோருக்கு பகிரங்கமாகவே நான் பதிலடி கொடுக்கிறேன்.

பின்தங்கிய இரண்டு லட்சம் தோட்டத்தொழிலாளர்களுக்கு, எமது நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில், அதற்கு முற்பட்ட நாற்பது வருட காலத்தில் நடைபெறாத பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம்.

எமது மக்கள் வளர்ந்தார்கள். துரதிஷ்டவசமாக எமது ஆட்சி இடை நின்று விட்டது. அது முடிவு இல்லை. நாம் மீண்டும் முன்பை விடப் பலமாக எழுந்து வருவோம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். - என்றும் தெரிவித்துள்ளார்.




## 77 வீத ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

நாட்டில் 77 வீத ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சீனா நன்கொடையாக வழங்கியுள்ள மேலும் 16 லட்சம் டோஸ் சினோபோர்ம் தடுப்பூசி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த தொகுதி தடுப்பூசிகள் வந்தடைந்தவுடன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 1 கோடியை கடந்துள்ளது.





## ஹிஷாலினியின் சடலத்தை தோண்டியெடுக்கும் நடவடிக்கை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய நிலையில் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமியின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரிகள் குழு முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுமியின் சடலத்தை நேற்று தோண்டி எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இறுதியில் அந்த முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையில் சிறுமி புதைக்கப்பட்ட மயான பகுதிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லடக்கம் செய்யப்பட்ட ஹிஷாலினியின் சடலம் எதிர்வரும் தினங்களில் தோண்டி எடுக்கப்படும் என டயகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மேல்மாகாணத்தில் டெல்டா வைரஸ் தீவிரம்



மேல் மாகாணத்தில் உள்ள கொவிட் தொற்றாளர்களிடம் இருந்து பெறப்பட்ட 30 வீத மாதிரிகளில் இருந்து டெல்டா மாறுபாடு கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார சேவைகளின் துணை இயக்குநர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்

டெல்டா மாறுபாடு மற்ற வகைகளை விட வேகமாகப் பரவுகிறது என்பது தெளிவாகிறது, இந்த மாறுபாடு பரவாமல் தடுப்பது முக்கியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, டெல்டா மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் மட்டும் பயனுள்ளதாக இருக்காது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைத் தலைவர் வைத்தியர்சந்திக எபிடகடுவ எச்சரித்துள்ளார். எவ்வாறாயினும், கொவிட் -19 மற்றும் டெங்கு ஆகியவை நாடு முழுவதும் ஒரே வேகத்தில் பரவுகின்றன என்று டி சோய்சா மகப்பேறு வைத்தியசாலையின் ஆலோசகர் வைத்தியர் பிரியங்கரா ஜெயவர்தன தெரிவித்தார்.

இந்நிலையில், கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை தாமதமின்றி பெறுமாறு அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

## உணவு விரயமாவதை தடுக்க நாடாளுமன்றத்தில் கவனம்!

நாடாளுமன்றில் உணவு விரயமாவதைத் தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் உணவு வீண் விரயமாவதைத் தடுக்கும் நோக்கில் விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்கள் விரயமாவதைத் தடுப்பது தொடர்பில் நாடாளுமன்ற பணியாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என நாடாளுமன்றின் துணை பொதுச் செயலாளர் டிக்கிரி ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உணவுப் பொருள்கள் விரயமாவதால் பாரியளவில் பணம் விரயமாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அடுத்த மாதம் முதல் அரச ஊழியர்களை வழமையான கடமைக்கு அழைக்க திட்டம்

அடுத்த மாதம் முதல் அரசாங்க ஊழியர்களை வழமை போன்று பணிக்கு அழைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பணியாளர்களுடன் நிறுவன நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக அமைச்சின் செயலாளர்கள் பலர் அறிவித்துள்ளனர் எனப் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து அரச ஊழியர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அழைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களின் ஊழியர்கள், தற்போது வாரத்தில் இரண்டு நாள்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2021இல் வெளியிடப்பெற்றது.